Community Resilience
to Foreign Interference

# வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தலும் வெளிநாட்டுத் தலையீடும்

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது, சிலர் வெளிநாட்டு அதிகாரிகளிடமிருந்து, குறிப்பாக அவர்களின் பாதுகாப்பு மற்றும் உளவு அமைப்புகளிடமிருந்து கூடுதல் கண்காணிப்பை எதிர்கொள்ள நேரிடலாம்; இது வெளிநாட்டுத் தலையீட்டின் ஒரு வடிவாக இருக்கலாம்.

இருப்பினும், பெரும்பாலான பயணிகள் இத்தகைய சூழல்களை எதிர்கொள்ள வாய்ப்பில்லை என்பதையும், எல்லைகளில் மேற்கொள்ளப்படும் சோதனைகள் உலகெங்கிலும் பொதுவானவை என்பதையும் நினைவில் கொள்வது அவசியம். இவை வழக்கமாக நடைமுறையின் ஒரு பகுதியாகவே இருக்கும், வெளிநாட்டுத் தலையீட்டுடன் தொடர்புடையவை அல்ல.

**வெளிநாட்டுத் தலையீடு தொடர்பான கூடுதல் கண்காணிப்பிற்கு உள்ளாகக்கூடிய நபர்களில் பின்வருவோர் அடங்குவர்:**

- நியூசிலாந்தில் ஏற்கனவே குறிவைக்கப்பட்ட நபர்கள்
- வெளிநாடுகளுக்கு எதிராக மாற்றுக் கருத்துகளைக் கொண்டிருப்பதாக அல்லது வெளிநாடுகளை விமர்சிப்பதாக அறியப்படும் சமூக உறுப்பினர்கள்
- சமூகத் தலைவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் ஆர்வலர்கள்
- குடும்பம், சமூகம் அல்லது வணிக காரணங்களுக்காகப் பயணம் செய்யும் சமூக உறுப்பினர்கள்
- நியூசிலாந்து அரசாங்கம், உள்ளூர் அரசு மன்றங்களில் பணிபுரிபவர்கள் அல்லது நியூசிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருக்கும் சமூக உறுப்பினர்கள்
- முக்கியமான உள்கட்டமைப்பு, கல்வித்துறை, ஊடகம் போன்ற இதர முக்கியத் துறைகளில் பணிபுரியும் சமூக உறுப்பினர்கள்
- முன்னாள் அகதிகள்.

**நாட்டைப் பொறுத்து மக்கள் எதிர்கொள்ளக்கூடிய அபாயங்கள் பின்வருமாறு:**

- பயணத் திட்டங்கள், செயல்பாடுகள் அல்லது தொடர்புகள் குறித்து உள்ளூர் **அதிகாரிகளால் தேவையற்ற முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுதல்**

- **நுழைவு அல்லது வெளியேற்றம்** மறுக்கப்படுதல், உதாரணமாக விமானத்தில் ஏற அனுமதி மறுக்கப்படுதல் அல்லது எல்லைச் சோதனைச் சாவடிகளில் **நுழைய மறுக்கப்படுதல்**
- **பயண அல்லது விசா கட்டுப்பாடுகள் விதிக்கப்படுதல்**, நாட்டின் உள்ளே செல்வதற்கான நடமாட்டக் கட்டுப்பாடுகள் உட்பட
- **தொலைபேசிகள்**, **மடிக்கணினிகள் அல்லது பிற மின்னணு சாதனங்கள் சோதனையிடப்படுதல்**, இதன் மூலம் தனிப்பட்ட தகவல்கள் அல்லது தொடர்புகளை அவர்கள் அணுகக்கூடும்
- **நாட்டிற்குள் நுழைந்த பிறகு குறிவைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் அல்லது சிறையில்** அடைக்கப்படுதல், இதில் முறையான சட்ட நடவடிக்கைகளும் அடங்கலாம்
- உள்ளூர் அதிகாரிகளால் **மிரட்டல், துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளுதல்**
- சட்ட அமலாக்கத் துறை அல்லது அதிகாரிகளால் மட்டுமல்லாமல், **உள்ளூர் குழுக்களாலும் விசாரணை, துன்புறுத்தல் அல்லது மிரட்டலுக்கு உள்ளாக்கப்படுதல்.**

## நியூசிலாந்து தூதரக உதவி

நியூசிலாந்து வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சகம் (MFAT), நியூசிலாந்திற்கு வெளியே இருக்கும் நியூசிலாந்து குடிமக்களுக்கு, அவர்கள் வழக்கமாக நியூசிலாந்தில் வசிக்காதவர்களாக இருந்தாலும், தூதரக சேவைகளை வழங்குகிறது.

நியூசிலாந்தில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்றவர்களுக்குப் பொதுவாகத் தூதரக உதவி வழங்கப்படுவதில்லை.

வெளிநாடுகளில் இருக்கும் நியூசிலாந்தியர்கள், அந்தந்த நாடுகளின் உள்ளூர் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்; இதில் தடுத்து வைத்தல், வழக்குத் தொடருதல் அல்லது பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பான அந்த நாட்டின் சட்டங்களும் அடங்கும்.

### இரட்டை குடியுரிமை கொண்டவர்கள்

இரட்டை குடியுரிமை பெற்றிருப்பது, நியூசிலாந்து அரசு தூதரக உதவிகளை வழங்குவதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். ஒரு நபர் தனது மற்றொரு குடியுரிமை உள்ள நாட்டில் இருக்கும்போது, அந்த நாட்டின்

உள்ளூர் அதிகாரிகள் அவரைத் தமது நாட்டு குடிமகனாக மட்டுமே கருதக்கூடும்; மேலும் நியூசிலாந்து தலையிடுவதை அவர்கள் அனுமதிக்காமல் போகலாம்.

சே.்.ப் டிராவல் இணையதளத்தில் நீங்கள் கூடுதல் தகவல்களைக் காணலாம்: இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் மற்றும் நிரந்தரக் குடியிருப்புவாசிகள்

### அகதிகள் மற்றும் முன்னாள் அகதிகள்

நீங்கள் நியூசிலாந்திற்கு வெளியே இருக்கும் ஓர் அகதியாக இருந்தால், நியூசிலாந்து அரசாங்கத்தால் வழங்கக்கூடிய உதவிகளில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் உள்ளன.

சே.்.ப் டிராவல் இணையதளத்தில் நீங்கள் கூடுதல் தகவல்களைக் காணலாம்: அகதிகள் மற்றும் முன்னாள் அகதிகள்

## சே.்.ப் டிராவல் நியூசிலாந்து

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் அல்லது வெளிநாடுகளில் வசிக்கும் நியூசிலாந்து குடிமக்களுக்காக, பயண ஆலோசனைகள், தூதரகச் சேவைகள், பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் பயணிகளுக்கானப் பதிவு முறை ஆகியவற்றை வழங்கும் நியூசிலாந்து வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் (MFAT) அதிகாரப்பூர்வ இணையதளம் சே.்.ப் டிராவல் நியூசிலாந்து ஆகும்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகள், அங்கு செல்வதற்கு முன்னதாகவே சே.்.ப் டிராவல் நியூசிலாந்தில் தங்களைப் **பதிவு செய்து கொள்ள வேண்டும்.** இது உடனுக்குடன் தகவல்களை வழங்கவும், தேவைப்படும் பட்சத்தில் பயணிகளைத் தொடர்பு கொள்ளவும், இயன்றவரை உதவிகளைச் செய்யவும் அமைச்சகத்திற்கு (MFAT) ஏதுவாக அமையும்.